பெரியார் பல்கலைக்கழகம்

**PERIYAR UNIVERSITY**

NAAC 'A++' Grade with CGPA 3.61 (Cycle - 3) – STATE UNIVERSITY – NIRF Rank 59 – Innovation Band of 11-50

**சேலம் – 636011, தமிழ்நாடு**

**SALEM-636011, TAMIL NADU**

கலைஞர் 100 1924 - 2023

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| முனைவர் சு. கதிரவன்<br>தேர்வாணையர் (மு.கூ.பொ)<br>பெரியார் பல்கலைக்கழகம்<br>சேலம்–636 011. | 1) அனைத்து துறைத்தலைவர்கள்<br>பெரியார் பல்கலைக்கழகம்<br>சேலம்–11.<br>2) இயக்குநர்(பொ)<br>பெரியார் பல்கலைக்கழக பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம், தருமபுரி – 635 205. |

க.எண்: பெ.ப/தே.அ/து.தே.பி/சிறப்பு தேர்வுகள் – 2023/014A/2023 நாள் : 24.08.2023

## சுற்றறிக்கை

அய்யா/அம்மையீர்,

பொருள் : பெரியார் பல்கலைக்கழக அனைத்து துறைகள், பெரியார் பல்கலைக்கழக பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம், தருமபுரி – இளநிலை/முதுநிலை/ஆய்வியல் நிறைஞர் பாடப்பிரிவுகள் – வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் தேர்ச்சி பெறாமல் காலம் கடந்த மாணாக்கர்கள் – சிறப்பு தேர்வுகள் நடத்துதல் (Special Exams) – தொடர்பாக.

பார்வை : துணைவேந்தர் அவர்களின் ஆணை நாள் : 22.08.2023.

-------------

பெரியார் பல்கலைக்கழகத்தின் அனைத்து துறைகள், பெரியார் பல்கலைக்கழக பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம் தருமபுரியில் ஆகியவற்றில் பயின்ற இளநிலை, முதுநிலை மற்றும் ஆய்வியல் நிறைஞர் மாணாக்கர்கள் எழுத்துத்தேர்வுகளில் (அல்லது) செய்முறைத்தேர்வுகளில் அனுமதிக்கப்பட்ட கல்வியாண்டிற்கு பின்னரும் தேர்ச்சி பெறாமல் உள்ள மாணாக்கர்கள் நலன் கருதி சிறப்பு தேர்வுகள் [Special Exams] நடத்தப்படும் என்று பார்வையில் குறிப்பிட்டுள்ள ஆணையின்படி தெரிவித்துக்கொள்ளப்பணிக்கப்பட்டுள்ளேன்.

இந்த சிறப்பு தேர்வில் விண்ணப்பிக்க தகுதியுடைய மாணாக்கர்கள் விவரங்கள் வருமாறு ;

| **Table – 1** | **Details of Eligible Students to Apply for Special Examinations** |
|---|---|
| UG STUDENTS [B.Voc] | Admission UPTO Year 2017 |
| UG STUDENTS [B.Ed – PART TIME] | Admission UPTO Year 2017 |
| PG STUDENTS – 2 Years Programme | Admission UPTO Year 2018 |
| PG STUDENTS – 3 Years Programme (MCA) | Admission UPTO Year 2017 |
| M.Phil FULL TIME STUDENTS | Admission UPTO Year 2019 |
| M.Phil PART TIME STUDENTS | Admission UPTO Year 2018 |

| Table –2 | Approved Fee for Special Exam [UG / PG / M.Phil] | | | |
|---|---|---|---|---|
| **Sl.No.** | **Course** | **Exam Fee (Per Paper)** | | **Penalty Fee (Per Paper)** |
| | | **Theory Exam** | **Practical** | |
| 1. | UG Prog [B.Voc] | Rs.100/- | Rs.100/-(3 hrs)<br>Rs.150/-(6 hrs) | Rs.2000/- |
| 2. | UG Prog [B.Ed. – Part Time] | Rs.200/- | Rs.275/- | Rs.2000/- |
| 3. | PG Prog [2 Years] | Rs.150/- | Rs.200/-(3 hrs)<br>Rs.275/-(6 hrs) | Rs.2000/- |
| 4. | PG Prog - (MBA) | Rs.400/- | Rs.350/-<br>Rs.700/-(Project) | Rs.2000/- |
| 5. | PG Prog - (MCA - 3 Years) | Rs.300/- | Rs.350/-<br>Rs.600/-(Project) | Rs.2000/- |
| 6. | M.Phil FULL TIME | Rs.400/- | Rs.1000/-<br>(Dissertation) | Rs.3000/- |
| 7. | M.Phil PART TIME | Rs.400/- | Rs.1000/-<br>(Dissertation) | Rs.4000/- |
| 8. | M.Phil – FULL TIME & PART TIME | Rs.600/- Per Month<br>(After completion of the minimum period) | | |
| | | Rs.1000/- Special Permission Fee (M.Phil) | | |

சிறப்புத்தேர்விற்கு உரிய நடைமுறைகள் :

1. ஏற்கனவே நடைமுறையில் உள்ளவாறு அனுமதிக்கப்பட்ட கல்வியாண்டு என்பது இளநிலை / முதுநிலை பாடப்பிரிவுகளாக இருந்தால் Number of Study Period + 3 years (N+3), ஆய்வியல் நிறைஞர் – Full Time (N+2) & Part Time (N + 2) என்று கணக்கிட்டு அதற்கு மேல் தேர்ச்சி பெறாத மாணாக்கர்கள் மட்டுமே சிறப்பு தேர்விற்கு அனுமதிக்கப்படுவார்கள்.
2. மேற்கண்ட அட்டவணை 1–ன்படி, தகுதியுடைய மாணாக்கர்கள் 01.09.2023 முதல் 29.09.2023 வரை அட்டவணை–2–ல் குறிப்பிட்டுள்ள கட்டணத்துடன் பல்கலைக்கழக இணையதளத்தில் (www.periyaruniversity.ac.in) இருந்து சிறப்பு தேர்வு விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து அந்த விண்ணப்பத்தை பூர்த்தி செய்து தேர்வு கட்டண விவரங்கள் இணைத்து சம்மந்தப்பட்ட துறைத்தலைவர்கள் /இயக்குநர்(பொ), பட்டமேற்படிப்பு மையம், அவர்களின் கையெழுத்து பெற்று விண்ணப்பிக்க வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை 29.09.2023 மாலை 5.00க்குள் தேர்வாணையர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
3. இத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் மாணாக்கர்கள் வழக்கமான தேர்வுகட்டணத்துடன் ஒறுப்புக்கட்டணமாக இளநிலை மற்றும் முதுநிலை மாணாக்கர்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.2000/–ம் மற்றும் ஆய்வியல் நிறைஞர் மாணாக்கர்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.3000/–ம் (முழு நேரம்), ரூ.4000/–ம் (பகுதி நேரம்) சேர்த்து செலுத்த வேண்டும். கட்டணத்தை கனரா வங்கி இரசீது (Canara Bank Challan) வாயிலாகவோ அல்லது ஏதேனும் தேசிய மயமாகக்கப்பட்ட வங்கி வரைவோலையாகவோ (Any Nationalised Bank, in favour of “The Registrar, Periyar University Payable at Salem) செலுத்தலாம்.
4. மாணாக்கர்கள் தாங்கள் பயின்ற கல்வியாண்டிற்கு உரிய பாடத்திட்டத்திலேயே நிலுவைத்தாள்களுக்குரிய தேர்வுகளை எழுதலாம்.

5. ஆய்வியல் நிறைஞர் (M.Phil) பாடப்பிரிவு மாணாக்கர்கள் ஏற்கனவே சிறப்பு தேர்விற்கு விண்ணப்பமும், கட்டணமும் செலுத்தியிருந்தால் அம்மாணாக்கர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை எனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

6. ஆய்வியல் நிறைஞர் (M.Phil) பாடப்பிரிவு மாணாக்கர்கள் ஆய்வறிக்கையினை (Dissertation) 29.09.2023-க்குள் சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இத்தேர்விற்கு உண்டான கால அட்டவணை (Exam Time Table) மற்றும் தேர்வு மையம் (Exam Centre) போன்ற விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். எனவே தங்கள் துறையில்/பட்டமேற்படிப்பு மையத்தில் பயின்று இன்னும் தேர்ச்சிபெறாமல் உள்ள மாணாக்கர்களை தொடர்பு கொண்டு மேற்கண்ட சிறப்பு தேர்வுகளின் விவரங்களை தெரியப்படுத்துமாறு இதன் வழியாக தங்களை கேட்டுக்கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

24/8/23

தேர்வாணையர்

இணைப்பு : 1) Exam Application [UG/PG]

2) Exam Application [M.Phil]

24/8/23

Phone (Landline) : 0427-2345766, 2346268, 2346269 Intercom : 222
E.mail : ude@periyaruniversity.ac.in Website: www.periyaruniversity.ac.in